6

# ஒருவரிலொருவர் அன்பாயிருத்தல்

*ஒன்று யோவான் நிருபம் கிறிஸ்தவ விசுவாசத்தின் நித்தியதன்மையை வலியுறுத்துகிறது. நமது வாழ்க்கையில் நிறைய விஷயங்கள் நிச்சயமற்றவைகளாக இருக்கின்றன. மாற்றம் ஒன்றே மாறாத ஒரு காரியமாக தோன்றுகிறது. சில காரியங்கள் நிச்சயமானவைகளாக இருக்கின்றன என்பதை அறிவது மகிழ்ச்சியாக இருக்கிறது. அவைகளை நாம் நம்பமுடியும், அவைகள் எப்போதும் உண்மையானவைகளாக இருக்கின்றன. அந்த நிச்சயமான காரியங்களில், கிறிஸ்தவர்கள் பிதாவோடு ஐக்கியத்தை அனுபவிக்க முடியும், அவரது குமாரன் மூலம் இரட்சிப்பை பெற முடியும் மற்றும் பாவத்தின் மேல் வெற்றி கொள்ள முடியும் என்ற உண்மைகள் அடங்கியுள்ளன!*

*நாம் இந்த பாடத்தில் இன்னொரு நிச்சயமான காரியத்தை கவனிக்க விரும்புகிறோம்: அது "ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும்" என்பதாகவுள்ளது. யோவான் இந்த நிருபம் முழுவதும் அன்பாயிருத்தலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார், KJV மொழிபெயர்ப்பில், பெயர்சொல்லாக அல்லது வினைச் சொல்லாக "அன்பு"[1] என்ற வார்த்தை 1 யோவானில் நாற்பத்தி ஐந்து முறை வந்துள்ளது![2] "அன்பின் அப்போஸ்தலனாகிய" யோவான், "அன்பின் நிருபமாகிய" 1 யோவானை எழுதினார். 1 யோவான் 4ஆம் அதிகாரத்தில் அன்பு சிறப்பாக வலியுறுத்தி சொல்லப்பட்டுள்ளது. (வசனங்கள் 7முதல் 21 வரையுள்ள), 15 வசனங்களில் யோவான் "அன்பு" என்ற வார்த்தையை 29 முறை பயன்படுத்தியுள்ளார். இது இப்பகுதியில் மூன்று வசனங்களுக்கு ஒரு முறை காணப்படுகிறது.[3] வழக்கமாக, 1 கொரிந்தியர் 13ஆம் அதிகாரம் "வேதகமத்தின் அன்பின் அதிகாரம்" என கருதப்படுவதுண்டு, ஆனால், 1 யோவான் 4ஆம் அதிகாரமும் இந்த பட்டத்தை பெற தகுதியானதாக இருக்கலாம்.*

*அதிகாரம் 4 இல் யோவான் இரண்டு நோக்கங்களை நிறைவேற்றுகிறார்: அவர் கள்ளப்போதனைகளுக்கு எதிராக எச்சரித்தார் மற்றும் சகோதரரை ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படி உற்சாகப்படுத்தினார். அந்த இரண்டும் தேவனை பிரியப்படுத்துவதற்கு நல்ல அடித்தளமாக அமைகிறது: நாம் உபதேசத்தில் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் மற்றும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும்!*

*அதிகாரம் 4 கள்ளப்போதகர்களைப் பற்றிய எச்சரிக்கைகளோடு துவங்குகிறது. கள்ளப்போதகர்கள் அல்லது கள்ளத் தீர்க்கதரிசிகள் இயேசுகிறிஸ்து மாம்சத்தில் வரவில்லை என்று போதித்து மக்களை வஞ்சித்துக்*

கொண்டிருந்தார்கள். அவர்கள் தேவ ஆவியினாலே பேசுவதாக கூறிவந்தார்கள், ஆனால் அது உண்மையாயிருக்கவில்லை, அவர்கள் செய்தி தேவ ஆவியினால் வந்த செய்தியிலிருந்து மாறுபட்டிருந்தது. ஆகவே, அவர்கள் எந்த ஆவியினால் பேசினார்களோ, அந்த ஆவி அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவியாயிருந்தது; அவர்கள் கிறிஸ்துவுக்கு எதிரானவர்களாயிருந்தார்கள். அவர்கள் போதனையை கேட்பதற்கென்று ஒரு கூட்டம் எப்போதும் ஆயத்தமாயிருந்தது: "உலகமும் அவர்களுக்கு செவி கொடுக்கும்" (வசனம் 5). யோவானுடைய வாசகர்கள் அவர்களுடைய உபதேசத்தை ஏற்றுக்கொண்டவர்களின் கூட்டத்தில் இருக்கவில்லை. அவர்களுக்குப் போதிக்கப்பட்டதிலிருந்து அவர்கள், ஒருவர் எதை போதித்தாரோ, அதிலிருந்தே அவர் "சத்திய ஆவியினால்" வழிநடத்தப்பட்டிருந்தாரா அல்லது "அவர்" வஞ்சக ஆவியினால் வழிநடத்தப்பட்டிருந்தாரா என்பதை பகுத்தறியக் கூடியவர்களாயிருந்தார்கள்.

கள்ளப்போதகர்களுக்கெதிராக எச்சரித்த பிற்பாடு, யோவான் தன் இருதயத்திற்கு அருகாமையிலிருந்த பாடத்திற்கு திரும்பினார்: நமக்காக தேவனுடைய அன்பு மற்றும் ஒருவரில் ஒருவர்மீதான அன்பு.

நாம் சகோதரர்கள் ஒருவரையொருவர் அன்புகூரவேண்டும் என்பதே இந்த அதிகாரத்தின் வசனப்பகுதியில் பவுலின் வலியுறுத்தமாக உள்ளது. நாம், "ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும்" என்பதற்கான பல காரணங்களை அவர் கொடுத்தார்.

## தேவன் நம்மிடத்தில் அன்புகூருகிறபடியால் (1 யோவான் 4:7-11)

"ஒருவரிலொருவர் அன்பாயிருத்தல்" என்ற இந்த பாடத்தின் தலைப்பு இந்த பாடத்தொடரின் பிற தலைப்புகளுக்கு இணையாயிருப்பதில்லை. அவைகள் கிறிஸ்தவராக நாம் பெற்றுக்கொண்டுள்ள ஆசீர்வாதங்களை வலியுறுத்துகின்றன; "ஒருவரிலொருவர் மீதான அன்பு" என்பது நமது பொருப்பைப் பற்றியதாகவுள்ளது. இருப்பினும், அன்பும் ஒரு ஆசீர்வாதமாகவே இருக்கிறது. யோவான், தேவன் நமக்காக கொண்டுள்ள அன்பு பற்றி பேசினார். 1 யோவானில் வலியுறுத்தப்படும் நிச்சயமான காரியங்களில் ஒன்றாக, தேவனுடைய அன்பு இருக்கிறது.

*தேவனுடைய அன்பின் உண்மை.* யோவான் இந்த நிருபத்தில் அன்பைப்பற்றி பல காரியங்களை கூற விரும்பினார், சிறப்பாக 1 யோவான் 4 இல், அன்பின் கதை துவங்குமிடத்தில், அன்பைப்பற்றி கூறும் பகுதியை துவங்கினார். "பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான்" (1 யோவான் 4:7). தேவன் நம்மில் அன்பாயிருப்பதால், நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்று யோவான் திரும்ப திரும்ப கூறினார்:

> தேவன் அன்பாகவே இருக்கிறார் (1 யோவான் 4:8; மேலும் காண்க 4:16).

> தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு

> வெளிப்பட்டது (1 யோவான் 4:9).
>
> நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால்அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்திசெய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது (1 யோவான் 4:10; காண்க 3:1).

அதன் பிறகு, அவர் இந்த உச்சக்கட்ட கருத்தை கூறினார்: "பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்" (1 யோவான் 4:11). இந்த அதிகாரத்தின் பின் பகுதியில், அவர், "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்" என எழுதினார் (1 யோவான் 4:19).

நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூருவதற்கான காரணம், நாம் தேவனை போலிருக்க வேண்டும் என்பதாயிருக்கிறது. தேவன் அன்பாகவே இருக்கிறார் - அன்புகூருதல் என்பது தேவனுடைய அடிப்படை குணாதிசயமாக இருக்கிறது. அன்பை விளங்கச் செய்வதால், நாமும் தேவனை போலிருக்கவேண்டும். யாரேனும் ஒருவர் உங்களைப்பற்றி சுருக்கமாக கூறவேண்டுமென முயற்சித்தால், அவர் உங்கள் குணாதிசயத்தைப்பற்றி "அவர் அன்பானவர்" அல்லது "அவள் அன்பானவள்" என்று கூறத்தக்க ஒரு வாழ்க்கையை நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா?

### தேவனுடைய அன்பு எப்படிப்பட்டதாயிருந்தது?

*தேவனுடைய அன்பின் குணாதிசயம்.* ஒரு முக்கியமான குணாதிசயம் என்னவென்றால், *தேவ அன்பு தன்னை தானே வெளிப்படுத்தினது* (1 யோவான் 4:9). தேவனானவர் பரலோகத்தில் வெறுமெனே இருந்து கொண்டு, "நான் உன்னை நேசிக்கிறேன்." என ஒரு கடிதத்தை நமக்கு அனுப்பவில்லை. அவர் தமது அன்பை, அவர் என்ன சொன்னாரோ அதினால் மட்டுமல்ல, அவர் என்ன செய்தாரோ அதினாலும் வெளிப்படுத்தியிருக்கிறார். யோவான் நாம் அவ்வண்ணமே நடந்து கொள்ள வேண்டுமென நமக்கு புத்தி கூறுகிறார்:

> ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலை கொள்ளுகிறதெப்படி? என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம் (1 யோவான் 3:17, 18).

கிறிஸ்தவர்கள் தங்கள் சகோதர சகோதரிகளை கட்டித்தழுவி, "பரிசுத்த முத்தத்தோடு" வாழ்த்துவது நல்லது தான், அதற்கும் மேலாக ஒருவருக்கொருவர் உதவி செய்வதால் அன்பை பறிமாறிக் கொள்வதே, அன்பை வெளிப்படுத்துகிற சிறந்த வழியாக உள்ளது, சில கிறிஸ்தவர்கள், "நான் உன்னை நேசிக்கிறேன்" என அடிக்கடி கூறிவந்தாலும், அன்பை வெளிப்படுத்துவதற்கு அவர்கள் ஒருபோதும் எதுவும் செய்வதில்லை. மற்றவர்கள், "நான் உன்னை நேசிக்கிறேன்," என அறிதாக கூறலாம், அதே சமயத்தில் தங்கள் சகோதரர்களுக்கு தாராளமாக

உதவி செய்வதின் மூலம் தங்கள் அன்பை வெளிப்படுத்தக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

- உணவு தேவைப்பட்டால், அவர்கள் உணவு வழங்குகிறார்கள்.
- அவசியம் நேரிட்டால், பயணத்திற்கு தங்கள் வாகனத்தை மகிழ்சியோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.
- யாரேனும் ஒருவருக்கு தங்க இடம் தேவைப்பட்டால், அவர்கள் வீடு அந்நியருக்கு திறந்திருக்கிறது.
- நோயுற்றோர் அல்லது துயருறுவோரோடு தங்கி அவர்களுக்கு உதவி செய்ய ஒருவர் தேவைப்பட்டால், இவர்கள் அந்த உதவியை செய்வார்கள் என நம்பிக்கையோடிருக்கலாம்.
- யாரேனும் ஒருவருக்கு பண உதவி தேவைப்பட்டால், அவர்கள் வெறுமென, "நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள்" என கூறுவதில்லை (யாக்கோபு 2:16). தேவையின் நேரத்தில், தங்கள் சக சகோதரருக்கு எதிராக தங்கள் இருதயத்தை அடைத்துக் கொள்வதில்லை (1 யோவான் 3:17), ஆனால் அவருக்கு தேவையான பணத்தை கொடுத்து உதவுகிறார்கள்.

"நான் உன்னை நேசிக்கிறேன்," என கூறியும் அன்பை காண்பிப்பதற்கு எதுவும் செய்யாத ஒரு கிறிஸ்தவர் மற்றும் வார்த்தைகளில் தன் அன்பை கூற சிரமப்படுகிற, அதே சமயத்தில் மற்றவர்களின் தேவைகளை சந்திக்கிற ஒரு கிறிஸ்தவர் இந்த இரண்டு வகை கிறிஸ்தவர்களில் - தேவன் விரும்புகிறபடி தன் சகோதரரை நேசிக்கிறவர் யார்?

தேவனுடைய அன்பு வெளிப்பட்டது மட்டுமல்ல, அது இவ்வளவு மகத்துவமாய் வெளிப்படுத்தப்பட்டது: *தேவன் நம்மை மற்றும் உலகத்தை இவ்வளவாய் நேசித்தார், தம் ஒரே பேறான குமாரனை நமக்காக மற்றும் உலகத்திற்காக மரிக்கும்படி ஒப்புக்கொடுத்தார்.* நாமும் நம் சகோதரர்களுக்காக மரிக்க விரும்பும் அளவுக்கு அவர்களை நேசிக்க வேண்டும். 1 யோவான் 3:16 ஐக் கவனியுங்கள்: "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனை கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்."

முதல் நூற்றாண்டில், நிஜமாகவே கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் மரிக்கவேண்டியது அவசியமாயிருந்தது. நாம் அந்த நாட்களில் வாழ்ந்திருந்தால், இயேசுவின் நாமத்தை மறுதலிக்காத விசுவாசிகள் கொல்லப்பட வேண்டும் என உத்தரவு பிறப்பித்த அதிகாரிகள் வசம் ஒப்புக் கொடுக்கப்பட்டிருப்போம். உங்கள் அயலகத்தார் நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தீர்கள் என சாட்சி சொல்ல, நீங்கள் கைது செய்யப்பட்டிருந்தீர்கள் என வைத்துக் கொள்வோம். நீதிபதி உங்களை பார்த்து, "நீங்கள் இயேசுவை ஆராதிக்கிற பெரிய தண்டனைக்குறிய குற்றவாளியாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. இருப்பினும், நீங்கள் உங்கள் சபையிலுள்ள மற்ற கிறிஸ்தவர்களின் பெயர்களை கொடுத்துவிட்டால், நாங்கள் உங்களை மன்னித்து விடுவோம். நீங்கள் உயிர் பிழைக்க அனுமதிக்கப்படுவீர்கள், மேலும் நீங்கள் உங்கள் இயேசுவை தொடர்ந்து ஆராதிக்கலாம், அவர்கள்

பெயர்களை மாத்திரம் கொடுத்துவிடுங்கள்." நீங்கள் என்ன செய்திருப்பீர்கள்? நீங்கள் உயிர் பிழைக்கும்படி, கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் சகோதர சகோதரிகளின் பெயர்களை கொடுத்திருப்பீர்களா - அல்லது தண்டனையை நிறைவேற்றினவர்கள் எதை தெரிந்து கொள்ள விரும்பினார்களோ, அதை தெரிவிக்க மறுத்து, மரணத்தை சந்தித்திருப்பீர்களா? அந்த நாட்களில், சகோதரர்களுக்காக நீங்கள் கொண்டிருக்கும் அன்பை காண்பிப்பதற்காக, நீங்கள் நிஜமாகவே அவர்களுக்காக மரிக்க வேண்டியதாயிருந்திருக்கும்.

இன்றும் கூட, சில இடங்களில் இப்படிப்பட்டவைகள் நிகழக்கூடும். நாம் நமது அழைப்புக்கு உண்மையாயிருந்தால் - தேவன் நம்மை நேசித்தது போல நாம் நேசிப்பவர்களாக இருந்தால் - நாம் நமது சகோதரர்களுக்காக மரிக்க விருப்பமுடையவர்களாக இருக்க வேண்டும்!

மேலும், *பக்தியுள்ளவர்களுக்காக அல்ல, இரட்சிப்பை பெற தகுதியில்லாத பாவிகளுக்காக, இயேசு மரித்ததினால் - தேவனுடைய அன்பு வெளிப்பட்டது.* யோவான், "நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினாலல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது" என எழுதினார் (1 யோவான் 4:10). நாம் தேவனை அதிகமாய் நேசித்ததினால், அவர் நம்மை நேசிக்கவில்லை; நாம் பாவிகளாக இருந்த போதிலும் அவர் நம்மை நேசித்தார் (காண்க ரோமர் 5:8) சிநேகிக்கப்படக்கூடாதவர்களை, அவர் சிநேகித்தார்.

தேவனானவர் அன்புகூருவது போல, நாமும் அன்புகூருவோமானால், நாமும் கூட அன்புகூரப்படக் கூடாதவர்களையும் அன்புகூரவேண்டும், ஒரு வேளை அது கடினமானதாக தோன்றலாம்! அன்புகூரக்கூடியவர்களை அன்புகூருவது சுலபமானதாக இருக்கலாம் - ஆனால் சிடு மூஞ்சிகாரர்கள், நன்றியில்லாதவர்கள் மற்றும் நாம் விரும்பாத குணாதிசயங்களையுடையவர்கள் இப்படிப்பட்டவர்களை நாம் எப்படி நேசிக்கக்கூடும்? நம்மை மதிக்காத, அல்லது நம்மில் அன்புகூராத, ஏன் நம்மை விரும்பாதவர்களைக் கூட நாம் எப்படி நேசிக்க கற்றுக் கொள்வோம்? நம்முடைய சத்துருக்களை நாம் எப்படி நேசிப்போம்?

அதற்கான ஒரு பதில் என்னவென்றால், வேதாகம அன்பு என்பது உணர்வுரீதியானது அல்ல. மாறாக, வேதாகம அன்பு என்பது நாம் யாரை நேசிக்கிறோமோ, அவர்களுக்கு எது சிறந்ததோ, அதை செய்ய தீர்மானிப்பதாகும். ஒரு உதாரணமாக சபையில் உள்ள சில தொல்லை கொடுக்கக் கூடியவர்களைப் பற்றி நாம் சிந்திக்கலாம். அவர்களைப்பற்றிய நம் *உணர்வுகள்* என்னவாக இருந்தாலும் சரி, நாம் அவர்களை *அன்பாய்* நடத்தி அவர்களிடத்தில் பொறுமையாயிருந்து, அவர்களுக்கு எது சிறந்ததோ அதை அவர்களுக்கு செய்யும் விதமாக நாம் அவர்களை நேசிக்க வேண்டும் (காண்க 1 கொரிந்தியர் 13:4-7).

நாம் நினைவில் கொள்ள வேண்டிய முக்கியமான சத்தியம் என்னவெனில் நமது சகோதரரை நேசிக்க வேண்டும் என்பது ஒரு தெரிவல்ல, அது ஒரு அவசியமான கட்டளை! 1 யோவான் 3:11ஐ கவனியுங்கள்: "நாம் ஒருவரிலொருவர் அன்புகூர வேண்டுமென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள்விப்பட்ட விசேஷமாயிருக்கிறது." அடுத்ததாக 1 யோவான் 3:23ஐ

*கவனியுங்கள். "நாம் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மேல் விசுவாசமாயிருந்து அவர் நமக்குக் கட்டளையிட்டபடி ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது.'' மேலும் 1 யோவான் 4:21 ஐயும் வாசியுங்கள். "தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூர வேண்டுமென்ற இந்த கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்." ஒருவரிலொருவர் அன்புகூர வேண்டும் என்பது ஒரு கட்டளையாயிருக்கிறது![4] நீங்கள் ஒருவேளை, "குறை சொல்லுகிற அந்த சகோதரரை நான் எப்படி நேசிக்க முடியும்?" என வினவினால் இதோ அதற்கான பதில்: நீங்கள் அவரை நேசிப்பதற்கான ஒரு வழியை கண்டு பிடிக்க வேண்டும்! அன்புகூருதல் என்பது, உங்களுக்கு சாத்தியமானால் நீங்கள் செய்யக்கூடிய ஒன்று அல்ல; மாறாக, நீங்கள் கண்டிப்பாக செய்தாக வேண்டிய ஒரு காரியமாக இருக்கிறது!*

*தகுதியில்லாதவர்களுக்காக தேவன் தம்முடைய குமாரனை மரிக்க கொடுத்ததால் அவருடைய அன்பு விளங்கியது, இப்படிப்பட்ட அன்பைத் தான் நாம் ஒருவரில் ஒருவர் கொண்டிருக்க வேண்டும்!*

## நாம் இதை செய்தால், தேவன் நம்மில் நிலைத்திருப்பார் (1 யோவான் 4:12-16)

*கிறிஸ்தவர்கள் என்ற முறையில் - தேவனோடு ஐக்கியமாயிருத்தல் நாம் அவரில் நிலைத்திருத்தல் மற்றும் அவர் நம்மில் நிலைத்திருத்தல் என்பது நமது பிரதானமான இலக்குகளாக இருக்கின்றன. அந்த ஐக்கியத்தை நாம் கொண்டுள்ளோம் என்பது நமக்கு எப்படி தெரியும்? 1 யோவான் 4:12-16, வசனங்களின்படி, கீழ்வரும் காரணங்களால் அந்த ஐக்கியத்தை நாம் கொண்டிருக்கிறோம் என்பதைப்பற்றி நிச்சயம் உடையவர்களாக இருக்க முடியும்:*

*(1) நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கிறோம் (4:12; காண்க வசனம் 16).*
*(2) அவர் தமது ஆவியை நமக்கு அருளியிருக்கிறார் (4:13).*
*(3) நாம் அப்போஸ்தலருடைய சாட்சியை விசுவாசித்து, இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்திருக்கிறோம் (4:14, 15).*
*(4) தேவன் நம்மேல் கொண்டுள்ள அன்பை அறிந்தவர்களாக இருக்கிறோம் (4:16).*

*நாம் ''ஒருவரில் ஒருவர் அன்பாயிருப்பதே'' நாம் தேவனில் நிலைத்திருக்கிறோம் என்பதையும், அவர் நம்மில் நிலைத்திருக்கிறார் என்பதையும் அறிவதற்கான ஒரு வழியாக இருக்கிறது! கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்களையும் சகோதரிகளையும் நாம் நேசிக்கவில்லையென்றால், நாம் தேவனுடனான ஐக்கியத்தைக் கொண்டிருப்பதில்லை!*

## அன்பு தைரியத்தை உண்டாக்கும் என்பதால் (1 யோவான் 4:17, 18)

*நாம் ''மாபெரும் நாள் ஒன்று வருகின்றது'' போன்ற பாடல்களை*

*பாடுகிறோம். பலர் நியாயத்தீர்ப்பு நாள் வருகிறது என்று அறிந்து அந்த நாளைப் பற்றி பயப்படக்கூடியவர்களாக இருக்கிறார்கள். இருப்பினும், நாம் பயப்பட தேவையில்லை என்று யோவான் கூறியுள்ளார். நாம் "நியாயத்தீர்ப்பு நாளிலே தைரியம் உடையவர்களாக" இருக்க முடியும் என யோவான் கூறியுள்ளார் (4:17). அவர் தொடர்ந்து கூறும்போது, "அன்பிலே பயமில்லை, பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்" (4:18அ) என்று கூறுகிறார்.*

*பயத்தை புறம்பே தள்ளி, நியாயத்தீர்ப்பு நாளிலே நமக்கு தைரியத்தை கொடுக்கிற இந்த "பூரண அன்பு" என்பது என்ன? இது, "பூரணப்பட்ட" அன்பாக இருக்கிறது (1 யோவான் 4:17; காண்க 2:5). நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும் போது, "அவருடைய அன்பு நமக்குள் பூரணப்படுகிறது" (4:18; காண்க வசனம் 12). "பூரணப்படுதல்" என்ற கருத்தானது, "முழுமையாக" மாறுதல் என்ற கருத்துக்கு இணையாக உள்ளது. அன்புள்ள கிறிஸ்தவர்களாக நாம் வளரும் போது, தேவனுடைய அன்பு நமக்குள் பூரணப்படுகிறது என யோவான் கூறினார்.[5]*

*தேவன் அன்பினால் மனிதனோடு செயல்படுவது, ஒரு மனித தந்தை தன் பிள்ளைகள் அன்புள்ளவர்களாயிருக்க வேண்டி பயிற்சி அளிக்க முயற்சிப்பது போன்று உள்ளது. நாம் நமது பிள்ளைகள் மற்றவர்களில் அன்புகூரும்படியாக, நல்லவர்களாயிருக்கும்படியாக மற்றும் இரக்கமுடையவர்களாயிருக்கும்படியாக போதிக்கலாம். அவர்கள் மற்றவர்களிடம் நன்றாய் நடந்து கொள்ளும் போது, அவர்களுக்கு பரிசளிப்பதினாலும் மற்றும் அவர்கள் மற்றவர்களை சரியாக நடத்தாதபோது, அவர்களை தண்டிப்பதினாலும், நாம் நமது போதனைகளை அமல்படுத்தலாம். நாம் நமது சொந்த வாழ்க்கையில் தானதர்மம் பண்ணுகிற குணாதிசயம் உடையவர்களாய் இருந்து, நமது முன்மாதிரியினால் நமது பிள்ளைகள் மற்றவர்களிடம் எப்படி அன்பாய் நடந்து கொள்ள வேண்டும் என்பதை போதிக்கலாம். இருந்தாலும், இன்னும் நமது பணி நிறைவடையவில்லை. நமது பிள்ளைகள் தாங்களாகவே முன்வந்து மற்றவர்களிடம் அவர்கள் அன்பை காண்பிப்பதை நாம் பார்க்கிற வரையில், நமது பணிமுடிவடைவதில்லை. நாம் அதை காணும்போது, நாம் ஓரளவு மனதிருப்தியடையலாம், அப்போது நாம், "அவர்களுக்கான என்னுடைய அன்பு பூரணப்பட்டுவிட்டது அல்லது முழுமையடைந்து விட்டது" என சிந்திக்கலாம். இதே விதத்தில்தான், தேவன் நம்மில் கொண்டிருக்கும் அன்பு, நாம் மற்றவர்களுக்கு அன்பை காண்பிப்பதால் கனிகொடுப்பதை அவர் பார்க்கும் போது, திருப்தியடைகிறார் என்பதில் சந்தேகம் இல்லை.*

*இதற்கு எதிராக, நாம் ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்க தவறுவோமானால், தேவ அன்பு நம்மில் பூரணப்படுவதில்லை, அது முழுமை அடையாமலிருக்கிறது. அவர் எதை நிறைவேற்ற விரும்பினாரோ அதை அது நிறைவேற்றவில்லை.*

*நியாயத்தீர்ப்பு நாளை குறித்து நீங்கள் எப்படி உணருகிறீர்கள்? நீங்கள் தைரியம் உடையவர்களாயிருக்கிறீர்களா அல்லது நீங்கள் பயப்படுகிறவர்களாயிருக்கிறீர்களா? நீங்கள் ஒரு தேவனுடைய பிள்ளையாக, மற்றவர்களிடத்தில் அன்புள்ளவர்களாயிருந்தால் "பூரண அன்பு பயத்தை புறம்பேதள்ளுவதால்" நீங்கள் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை.*

# *நாம் தேவனிடத்தில் அன்புகூருகிறபடியால்*
# *(1 யோவான் 4:19-21)*

*தேவனுடைய அன்புக்காக நாம் செய்யும் முதல் பதில்செயல் தேவனிடத்தில் அன்புகூருவதாக இருக்க வேண்டும். யோவான், தேவன் நம்மில் அன்பாயிருக்கிறார் என்பதையும் வலியுறுத்தி கூறிய போது, நாம் தேவனில் அன்பாயிருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தி கூறியுள்ளார். "நான் தேவனிடத்தில் அன்புகூருகிறேன்" எனக் கூறியவர்களைப் பற்றி யோவான் குறிப்பிட்டுள்ளார் (வசனம் 20), கிறிஸ்தவர்கள் அந்த நாளில் பொதுவாக பிதாவின் பேரில் கொண்டிருந்த தங்கள் அன்பை உறுதி செய்து வந்தார்கள் (மேலும் காண்க 1 யோவான் 2:15; 4:21; 4:10; 5:1-3).*

*நாம் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களாக இருந்தால், நாம் சகோதரரை எப்படி நடத்த வேண்டும்? இதோ, இங்கே சில சத்தியங்கள். (அ) எல்லா மனிதரும் தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்டிருக்கிறார்கள். (ஆ) தேவன் எல்லா மக்களையும் நேசிக்கிறார், அவர் அன்புகூரப்பட தகுதியில்லாதவர்களையும் நேசிக்கிறார். (இ) தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறவர்கள், தேவனால் விசேஷித்த வகையில் அன்புகூரப்பட்டும், ஆசீர்வதிக்கப்பட்டும் வருகிறார்கள் மற்றும் அவர்கள் தேவனுடைய குணாதிசயங்களை பகிர்ந்து கொள்கிறார்கள்: "அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்" (1 யோவான் 4:17). (ஈ) கிறிஸ்தவர்களாக மாறியிருக்கிறவர்கள் கிறிஸ்துவுக்குள் நம்முடைய சகோதரரும் மற்றும் சகோதரிகளுமாயிருக்கிறார்கள், அவர்களுக்காக நாம் மரிப்பதற்கு கூட விருப்பம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் (1 யோவான் 3:16)! இப்படியிருக்க, ஒருவர் தன் சகோதரனை பகைத்துக் கொண்டிருக்கிற வேளையில், "நான் தேவனிடத்தில் அன்புகூருகிறேன்" என உரிமைகோரமுடியும் (1 யோவான் 4:19, 20)? இதை நாம் இவ்விதமாக கூறலாம்: "உன்னிடத்தில் நீ அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்ற இரண்டாம் கற்பனைக்கு நீங்கள் கீழ்ப்படிந்திருக்காதவரை - "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக" - என்ற முதலாம் பிரதான கட்டளைக்கு நீங்கள் உண்மையில் கீழ்ப்படிய முடியாது (மத்தேயு 22:37-39).*

*நாம் என்ன செய்ய வேண்டும்? தேவனானவர் நம்மிடத்திலும் பிறரிடத்திலும் அன்பாயிருந்தால், நாம் அவரில் அன்பாயிருக்க வேண்டும், அப்படி நாம் அவரில் அன்பாயிருப்பதால், பிறரிடத்திலும் நாம் அன்பாயிருக்க வேண்டும். "தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்பு கூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்" (1 யோவான் 4:21).*

*1 யோவான் 4:19-21 இல் உள்ள செய்தி இயேசுவானவர் மத்தேயு 23, இல் வேதபாரகர் மற்றும் பரிசேயர் ஆகியோரை மாயக்காரர் என்று கடிந்து கொண்டதற்கு ஒப்பாக இருக்கிறது. அவர் அவர்களை நோக்கி, "பார்வைக்காக நீண்ட ஜெபம் பண்ணி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப்*

போடுகிறீர்கள்" என்றார் (மத்தேயு 23:14). அவர்கள் எளியோரை இரக்கமின்றி நடத்தினார்கள், அதே சமயத்தில் தங்களை பெரிய பக்திமான்களாக காட்டிக் கொண்டார்கள். மேலும் இயேசுவானவர், "நீங்கள் ஒற்றலாமிலும் வெந்தையத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்" என்றார் (மத்தேயு 23:23). யோவான் இதற்கு இணையான சில காரியங்களை குறித்து சொல்லவில்லையா? அநேகமாக, இந்த சகோதரர்கள் சபைக்கு தவறாமல் சென்று வந்தார்கள், உரத்த சத்தமாய் ஜெபித்திருக்கிறார்கள் மற்றும் உற்சாகமாக பாடியிருக்கிறார்கள், இவ்விதமாக அவர்கள் தேவன் பேரில் தங்களுக்கு இருந்த பெரிதான அன்பை தெரியப்படுத்தியிருந்தார்கள். இருந்தபோதிலும், அவர்கள் தங்கள் சகோதரர்களின் தேவைகளை பூர்த்தி செய்யாமல் இருந்து, ஒருவரை ஒருவர் இரக்கமின்றி நடத்தியிருந்ததால் அவர்கள் தாங்கள் தேவனில் அன்புகூருவதாக அறிக்கையிட்டிருந்தது வீணானதாய் இருந்தது. இதை குறித்துக் கொள்ளுங்கள், அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள் மற்றும் மனனம் செய்து கொள்ளுங்கள்: "தான் கண்ட சகோதரனிடத்தில் (அவனுடைய தேவைகளை சந்திப்பதின் மூலம் மற்றும் அவனுக்கு உதவி செய்வதின் மூலம்) அன்புகூராதவன், தான் காணாத தேவனிடத்தில் அன்புகூரமுடியாது"![6]

## முடிவுரை

நாம் இந்த பாடத்தை நிறைவு செய்கிற வேளையில், நம்முடைய ஆத்துமாக்களின் நிலையை பரிசோதித்து பார்க்க வேண்டும். நாம் சில நேரங்களில், "எல்லாம் என் ஆத்துமாவோடு நன்றாயிருக்கிறது"[7] என பாடுகிறோம். எல்லாம் உங்கள் ஆத்துமாவோடு நன்றாயிருக்கிறதா? அது உங்களுக்கு எப்படி தெரியும்? நீங்கள் இயேசு கிறிஸ்துவை, மாம்சத்தில் வந்த தேவன், தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்தால் நீங்கள் சிறப்பானதை செய்திருக்கிறீர்கள். நீங்கள் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து, தேவனுடைய ஒரு பிள்ளையாக மாறியிருந்தால், அதில் நீங்கள் மகிழ்ந்து தேவனுடைய கிருபைக்காக நன்றி செலுத்தலாம். ஏனெனில், நீங்கள் தேவனோடு ஐக்கியமாயிருக்கவும் மற்றும் கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள மற்ற பரிசுத்தவான்களோடு ஐக்கியம் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளீர்கள். கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலம் நீங்கள் உங்கள் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட்டிருந்தால் மற்றும் உங்கள் அன்றாட வாழ்வில் பாவ செயல்களை போராடி மேற்கொண்டு வந்தால், தேவன் உங்களுக்கு அருளியிருக்கிற இரட்சிப்புக்காக நீங்கள் அவரை துதிக்கலாம்.

நாம் செய்து நிறைவேற்றுவதற்கு இவை மட்டும் தான் இருக்கிறதா? ஆரோக்கியமான உபதேசத்தை மட்டும் விசுவாசிப்பது, சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவது, கர்த்தருடைய சபையிலுள்ள மற்ற சீஷர்களோடு ஐக்கியமாயிருப்பது, ஆராதனையில் தேவனை துதிப்பது மற்றும் நமது தனிப்பட்ட வாழ்வில் பாவத்திற்கு விலகி இருப்பது போன்ற காரியங்களை மட்டும் செய்து கொண்டிருத்தல் போதுமானதா? நமது ஆத்துமாக்கள் "நன்றாயிருக்கின்றன" என்பதை உத்தரவாதப்படுத்துவதற்கு இந்த காரியங்கள் மட்டும் போதுமா அல்லது, இதற்கும் கூடுதலாக எதுவும் செய்ய வேண்டியிருக்கிறதா?

விசுவாசமுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையில் இன்னும் கூடுதலானவைகள்

*அடங்கியுள்ளன. கிறிஸ்தவர்கள் ஒருவரில் ஒருவர் அன்பாயிருப்பதின் மூலம், தாங்கள் தேவனில் அன்பாயிருப்பதை விளங்கப்பண்ணவேண்டும்; அந்த அன்பானது வார்த்தைகளில் மட்டும் அல்ல, கிரியைகளிலும் செயல் விளக்கப்படுத்தப்பட வேண்டும். கிறிஸ்தவ சகோதரர்களுக்கு, உதவி செய்வதின் மூலம் மற்றும் அவர்களுடைய தேவைகளை சந்திப்பதின் மூலம், நீங்கள் அவர்களில் கொண்டிருக்கும் உங்கள் அன்பை காண்பிக்கிறீர்களா? இல்லையென்றால், உங்கள் ஆத்துமாவின் நிலை என்னவாக இருக்கிறது?*

---

குறிப்புகள்

[1]*Agape* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [2]இந்த கணக்கீடு ராபர்ட் எங் என்பவரின் நூலின் அடிப்படையில் அமைந்துள்ளது. *Young's Analytical Concordance to the Bible* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., n.d.), 622-23. [3]*1 யோவான் 4:13-15 ஆகிய வசனங்களில் "அன்பு" என்ற வார்த்தை குறிப்பிடப்படாமல் இருந்த போதிலும், அவைகள் விவாதிக்கப்படும் பாடத்திற்கு தொடர்புடையதாக இருக்கிறது: கிறிஸ்தவர்களுக்கான தேவனுடைய அன்பு மற்றும் கிறிஸ்தவர்கள் ஒருவரில் ஒருவர் கொண்டிருக்கும் அன்பு.* [4]*1 யோவான் 2:7-11; 3:11 ஆகிய வசனங்களையும் காணவும்.* [5]*ஒருவரில் ஒருவர் அன்பாயிருப்பது தைரியத்தை உருவாக்குகிறது, "நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்" என்று யோவான் கூறுகிறார் (1 யோவான் 3:14).* [6]*"தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லையானால்" (வசனம் 12), வேதாகமத்தில் சில தனிநபர்கள் அவரை கண்டதாக எப்படி சொல்லப்படுகிறது? "தேவன் ஆவியாயிருக்கிறபடியால்" (யோவான் 4:24), சரீர கண்கள் அவரை பார்க்க முடியாது. ஒரு ஆவி என்பது காணப்படாததாக இருக்கிறது. ஆகவே, ஒரு மனிதன் தேவனை கண்டதாக சொல்லப்படுமானால், அவர் உண்மையில் தேவனை கண்டிருக்கவில்லை. அவர் தேவனுடைய ஒரு வெளிப்பாட்டினை கண்டார். வேதாகம காலங்களில், தேவன் தம்மை பல விதங்களில், உதாரணமாக, ஒரு எரிகிற முட்செடியில் அல்லது ஒரு மனித வடிவில் மனிதருக்கு வெளிப்படுத்தினார். அந்த வெளிப்பாடு உண்மையில் (ஆவியாயிருக்கிற) தேவனாயிருக்கவில்லை, ஆனால் அது அவருடைய ஒரு பிரதிநிதித்துவப்படுத்துதலாயிருந்தது. ஜான் ஆர். ஸ்பாட் என்பவர். "பழைய ஏற்பாட்டில் தேவன் மனித உருவில் வெளிப்பட்டதாக சொல்லப்படும் காட்சிகள் மனித சாயலை எடுத்துக்கொண்டது போன்ற வெளிப்பாடுகள் மட்டும் தான்; அவைகள் தேவன் தம்மில் தாமே இருப்பது போன்ற அவருடைய தரிசனங்கள் அல்ல"* (John R. W. Stott, *The Epistles of John,* The Tyndale New Testament Commentaries [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960], 163). [7]Horatio G. Spafford, "It Is Well with My Soul," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994).